

கடலூர் மேற்கு மாவட்டம் ,நெய்வேலி சட்டமன்ற தொகுதி கழக பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் அமைச்சர் சி.வெ. கணேசன் பேசினார், உடன் சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ. தொகுதி பொறுப்பாளர் இளையராஜா, மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர ,பேரூர், கழக நிர்வாகிகள், தொ.மு.ச. மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்!

# வேலூர் மாவட்டம் முழுவதும் எழுச்சியுடன் கொண்டாடப்படும்!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் அறிவிப்பு!

வேலூர்,பிப்,18-

வேலூர் மாவட்ட திமுக அலுவலகத்தில் மாவட்ட அவசர செயற்குழு கூட்டம்,மாவட்ட அவைத்த லைவர் தி.அ.முகமது சகித லைமையில் நடைபெற்றது.

இதில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த, மாநகர செயலாளர் பகார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன், மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன் , மாவட்ட துணை செயலாளர்கள் மலர் விழி, பிரதாப குமார் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் முபாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா, துணை மேயர் சுனில் குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன் ஒன்றிய,நகர, பகுதி,பேரூராட்சி கழக செயலாளர்கள் தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொது குழு உறுப்பினர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில்நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவர் தளபதி அவர்களின் 72வது ஆண்டு பிறந்த நாளை வேலூர் மாவட்ட திமுகவிற்கு உட்பட்ட 5 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் அமைப்புகளில் கழக இரு வண்ண கொடியேற்றி ஏழை, எளிய நலிந்தோர்களுக்கும், ஆதரவற்றோர்களுக்கும், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கும் நலத் திட்ட உதவிகள் வழங்கி எழுச்சியோடு, எட்டுதிக்கும் உவகை கொள்ளும் வகையில் கொண்டாடிட வேண்டுமென மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கடந்த 100 ஆண்டு காலமாக தமிழகத்தில் தாய் தமிழ்நாடு மற்றும் தாய் மொழி உணர்வு, தமிழர்களின் ஒருமித்த வளர்ச்சி ஆகிய விழுமியங்களை உள்ளடக்கி திராவிட இயக்க தலைவர்கள் தன்னலம் கருதாமல் மேடை பேச்சில் புரட்சி, முற்போக்கு எழுத்தில் புரட்சி ஆகியவற்றை முன்னெடுத்து இன துரோகிகளின் அரசியல் சதிராட்டங்களை சுக்குநூறாக தூள்தூளாக்கி படிப்படியாக இந்திய ஒன்றியத்தில் தமிழ்நாடு இந்திய மாநிலங்களில் முதன்மை பெற்ற மாநிலமாக தலை நிமிர்ந்து வெற்றிநடை போட அண்ணாவின் பெயரால் அண்ணா அறிவாலயம் அமைத்து திராவிட பெருமக்களின் முகவரியாய் திகழும் அண்ணா அறிவாலயத்தை செங்கல் செங்கலாக பிரிக்கும்வரை நான் தமிழ்நாடு பா.ஜ.க. தலைவராக தொடருவேன் என அகங்காரத்துடன் பேசிவரும் ஐந்தறிவுக்கும் கீழான ஆடு மாடுகளை காட்டிலும், அறிவற்ற ஜடமாக உலவும் அரசியல் யாசகன் அண்ணாமலைக்கு வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கடும் கண்டனத்தை தெரிவித்தும், உங்களுக்கு முன்பாக இவ்வாறு பேசி தி.மு.க.வை அழிப்பேன் என ஆணவம் பேசிய அத்துணை தமிழின துரோகி களான எதிர்க் கட்சி தலைவர்களுக்கு சமாதி கட்டிய வரலாற்றை நினைவுபடுத்தி திராவிட மாடல் இயக்கத்தின் தலைமையகம் அறிவாலய கட்டிடத்தின் ஒருபிடி மண்ணை கூட உன்னால் எடுக்க முடியாது என கடும் கண்டனம் தெரிவித்து வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கடும் கண்டன தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.


எதிர்வரும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் வெல்வோம் இருநூறு இதுவே நமது இலக்கு எனும் லட்சியத்தோடு கழகத்தலைவர் முதல்வர் மற்றும் துணை முதல்வர் மற்றும் பொதுச் செயலாளர் ஆகியோர்களின் தேர்தல் அரசியல் வியூகங்களை கையாண்டு வெற்றிவாகை சூடி மீண்டும் கழக அரசு கழகத்தலைவர் அவர்கள் தலைமையில் அமைந்திட இன்று முதல் தேர்தல் பிரச்சார யுக்திகளை கையாண்டு களப்பணி ஆற்றிடும் ஒரு பகுதியாக மாவட்டத்திற்கு உட்பட்ட 5 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2) மற்றும் வாக்குச்சாவடி குழு நிர்வாகிகள் (BLC) ஆகியோர்கள் முழுஉத் வேகத்துடன் பணியாற்றிட தயாராவோம்எனகேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப் படுகிறது.



திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம் அக்ரஹாரம் அரசு மேல் நிலைப் பள்ளியில் நடைபெற்ற பள்ளி ஆண்டு விழாவில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இந்திரவர்மன் மற்றும் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மாங்குடி மதியழகன்
### பிப்ரவரி 18 (1974)



கழகம் துவங்கப்பட்ட போதே உறுப்பினராகியதுடன், 1950களில் அயல்நாடான பர்மாவில் கழகத்தை வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.

தமிழகம் திரும்பிய பின்னர், 1960களில் இராமநாதபுரம் மாவட்ட துணைச் செயலாளராகவும் – முதுகுளத்தூர் வட்டச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

முதுகுளத்தூர் ஒன்றிய பெருந்தலைவராகவும் – மாநில பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு உறுப்பினராகவும், முதுகுளத்தூர் நிலவள வங்கி தலைவராகவும், ஆனையூர் கூட்டுறவு வங்கி தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, சட்டநகல் எரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு மதுரை மத்திய சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



## தி.மு.க.
## இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்
## புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–3 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற்று வருகிறது. இரண்டாம் கட்டமாக திருப்பத்தூர் & காஞ்சிபுரம் தெற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 18.02.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | திருப்பத்தூர் | எஸ்.ஆர்.கே.கன்வென்ஷன் ஹால், ஈத்கா ரோடு, (வடமலை பவன் பின்புறம்) திருப்பத்தூர். |
| 19.02.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | காஞ்சிபுரம் தெற்கு | ப்ரியா மஹால், மல்லியங்கரணை செல்லும் வழி, உத்திரமேரூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 14-02-2025



### இன்று கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின்

# மாநில - மாவட்ட நிர்வாகிகள் கூட்டம்!

## மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை, பிப். 18-

கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (18.02.2025) அண்ணா அறிவாலயத்திலுள்ள கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது. எனவே சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு மாநிலச் செயலாளர் அ.சுபேர்கான் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது-

கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அவர்களின் தலைமையில் இன்று (18.02. 2025 செவ்வாய்க்கிழமை) காலை 10:00 மணியளவில் அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட மாநகர அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இக்கூட்டத்தில் சிறுபான்மையின மக்களின் பாதுகாவலர், ஒப்பற்ற தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழாக் கொண்டாட்டம் மற்றும் கழக ஆக்கப் பணிகள் தொடர்பாக ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு டாக்டர் சுபேர்கான் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## டெல்லி, பீகார், ஒடிசா மாநிலங்களில் நிலநடுக்கம்!

டெல்லி, பிப்.18-

டெல்லி, பீகார், ஒடிசா மாநிலங்களில் அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. டெல்லியில் அதிகாலை 5.36 மணி அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. வீடுகளுக்குள் தூங்கி கொண்டிருந்த மக்கள் நில அதிர்வால் மிகுந்த அச்சத்துடன் எழும்பி வீடுகளை விட்டு சாலைகள் மற்றும் பல்வேறு இடங்களில் தஞ்சம் புகுந்தனர்.

திடீரென ஏற்பட்ட நிலநடுக்கம் மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது. டெல்லியில் ஏற்பட்ட நிலநடுக்கம் பலத்த சத்தம் உள்ளதாக இருந்துள்ளது. கட்டில், சோபா உள்ளிட்டவைகள் தூக்கி வீசப்பட்டன. இந்த நில அதிர்வானது 4.0 ஆக பதிவாகி உள்ளது. டெல்லி மட்டுமல்லாமல் அரியானா, உத்தரபிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட பகுதிகளிலும் இந்த நில அதிர்வு உணரப்பட்டுள்ளது.

## தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 22-02-2025 சனிக்கிழமை, காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், எனது தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில தொழிலாளர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 17.02.2025

**பிடிசி ஜி.செல்வராஜ்,**
செயலாளர்,
தி.மு.க. தொழிலாளர் அணி.

## அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

திமுக அமைப்பு சாரா ஓட்டுனர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் வருகின்ற 22.02.2025 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு மாநில தலைவர் **டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி.** தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்: 1. மார்ச் 1ம் தேதி, கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதியார் அவர்களின் பிறந்த நாள் விழா கொண்டாட்டம் குறித்து.**

**2. அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் வளர்ச்சி குறித்த ஆலோசனை**

**இடம்:** அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
நாள் : 17.02.2025

**டி.செங்குட்டுவன்,**
மாநில செயலாளர்,
தி.மு.க. அமைப்பு சாரா
ஓட்டுநர் அணி



வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடந்த அவசர செயற்குழு கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. பேசினார்.அருகில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




திருப்பத்தூர் ஒன்றியம், ராச்சமங்கலம் ஊராட்சி வினாயகபுரம் போயர்வட்டம் மற்றும் கந்திலி ஒன்றியம், விசமங்கலம் ஊராட்சி பானக்காரன்வட்டம் ஆகிய பகுதிகளில் சாலைகளுக்கு நபார்டு திட்டத்தின் கீழ் மேம்படுத்த ரூ.1 கோடியே 22லட்சம் நிதி ஒதுக்கியதைத் தொடர்ந்து அதன் மேம்பாட்டுப்பணிக்காக ஏ.நல்லதம்பி எம்.எல்.ஏ. பணியை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், ராஜேந்திரன், விஜயகுமார், சின்னபையன், கந்திலி கிழக்கு ஒன்றிய செயலாளர்.மோகன்ராஜ், கவுன்சிலர்கள். லட்சுமி சந்திரசேகர், ஹேமாவதி வினோத், தசரதன், தண்டபானி, ஊராட்சிமன்ற தலைவர் சாந்திமுருகன், கிளைநிர்வாகிகள் கலந்துகொண்டனர்.